அலகு II

பாடம் 8

# சரங்கள் மற்றும் சரங்களைக் கையாளுதல்

## கற்றலின் நோக்கங்கள்

இப்பாடத்தைக் கற்றறிந்த பிறகு, மாணவர்கள் பின்வரும் செயல்பாடுகளை செய்ய இயலும்.

- உரையை செயல்படுத்தும் வழிமுறைகள் பற்றி தெரிந்து கொள்ளுதல்.
- பைத்தானில் உள்ள சரங்களை கையாளும் செயற்கூறுகள் பற்றி புரிந்து கொள்ளுதல்.
- சரங்களை வடிவூட்டல் செய்யும் முறைகள் பற்றி அறிதல்.
- சரங்களை பிரிக்கும் முறை பற்றி தெரிந்து கொள்ளுதல்.
- நடப்புலகில் சரங்களின் பயன்பாடு பற்றி தெரிந்து கொள்ளுதல்.

## 8.1 அறிமுகம்

குறியுருக்களின் அணியை கையாளுவதற்கான ஒரு தரவு இனம் சரம் (String) ஆகும். சரங்கள் என்பன, ஒற்றை, இரட்டை, அல்லது மூன்று மேற்கோள் குறிகளுக்குள் கொடுக்கப்படும், எழுத்து, எண்கள் அல்லது சிறப்பு குறியீடுகளின் சேர்க்கையை கொண்டிருக்கும் ஒருங்கமைவு (Unicode) குறியுருக்களின் வரிசை ஆகும்.

**எடுத்துக்காட்டு**

‘Welcome to learning Python’

“Welcome to learning Python”

‘‘‘ “Welcome to learning Python” ’’’

பைத்தானில் சர தரவுவகை மாற்ற இயலாதது (immutable). அதாவது சரத்தரவு வகையை வரையறுத்த பின்பு இயங்கு நேரத்தில் அதை மாற்றியமைக்க முடியாது.

## 8.2 சரம் உருவாக்குதல்

நாம் முன்பே கற்றது போல பைத்தானில் சரமானது ஒற்றை மேற்கோள் குறிகளுக்குள்ளோ அல்லது இரட்டை மேற்கோள் குறிகளுக்குள்ளோ அல்லது மூன்று மேற்கோள் குறிகளையோ கொண்டு உருவாக்கப்படும். ஒற்றை மேற்கோள் குறிகளுக்குள் உள்ள சரம் மற்றுமொரு ஒற்றை மேற்கோள் குறிகளை கொண்ட சரத்தை கொண்டிருக்க முடியாது. ஏனெனில் வரி மொழி மாற்றி சரத்தின் தொடக்கம் மற்றும் முடிவை அறிய இயலாது. இந்த சிக்கலை தீர்க்க இரட்டை மேற்கோள் குறிகளை பயன்படுத்தலாம். சரமானது இரட்டை மேற்கோள் குறிகளையும் உறுப்பாக பெற்றிருந்தால் அது மூன்று மேற்கோள் குறிகளுக்குள்



12th Computer Science_TM Chapter 8.indd 118 11-01-2023 12:38:36